**பாடம் - 4** | **الدرس الرابع**

## உளு

## الوضوء

உளு இல்லாமல் தொழுகை ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது. நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'உங்களில் ஒருவருக்கு உளு நீங்கிவிட்டால் மீண்டும் உளுச் செய்து தொழாதவரை அவரது தொழுகையை அல்லாஹ் ஏற்றுக்கொள்வதில்லை.' அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: புகாரி(6954), முஸ்லிம்(225)

عَنْ أَبِي هُرَيْرَةَ عَنْ النَّبِيِّ ﷺ قَالَ: لَا يَقْبَلُ الله صَلَاةَ أَحَدِكُمْ إِذَا أَحْدَثَ حَتَّى يَتَوَضَّأَ (خ/ ٦٩٥٤، م/ ٢٢٥)

உளுவுக்கு மகத்தான சிறப்புகள் உள்ளன. மனிதன் அதை உணர்ந்து செயல்படுவது அவசியமாகும். அச்சிறப்புகளில் சில:

عَنْ عُثْمَانَ بْنِ عَفَّانَ ﷺ قَالَ قَالَ رَسُولُ الله ﷺ مَنْ تَوَضَّأَ فَأَحْسَنَ الْوُضُوءَ خَرَجَتْ خَطَايَاهُ مِنْ جَسَدِهِ حَتَّى تَخْرُجَ مِنْ تَحْتِ أَظْفَارِهِ (م/ ٢٤٥)

'யார் உளுச் செய்கிறாரோ அதையும் அழகாகச் செய்கிறாரோ அவரது பாவங்கள் அவரது உடம்பிலிருந்து ஏன் அவருடைய நகக்கண்கள் வழியாகக் கூட வெளியேறிவிடுகின்றன' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: உஸ்மான் (ரலி), நூல்: முஸ்லிம்-245

عن عُثْمَانَ بْنَ عَفَّانَ ﷺقَالَ قَالَ رَسُولُ الله ﷺ: مَنْ أَتَمَّ الْوُضُوءَ كَمَا أَمَرَهُ الله تَعَالَى فَالصَّلَوَاتُ الْمَكْتُوبَاتُ كَفَّارَاتٌ لِمَا بَيْنَهُنَّ (م/ ٢٣١)

'அல்லாஹ் ஏவியபடி முழுமையாக உளுச் செய்து கடமையான தொழுகை களை யார் நிறைவேற்றுகிறாரோ அவற்றுக்கு இடையேயுள்ள பாவங்களுக்கு அவை பரிகாரமாக அமைகின்றன' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: உஸ்மான் (ரலி), நூல்: முஸ்லிம்-231

### உளுச் செய்யும் முறை

**1.**உளுச் செய்கின்றேன் என்று நாவால் மொழியாமல் மனதால் எண்ணிக் கொள்ள வேண்டும். ஏனெனில் நிய்யத் என்பது ஒன்றைச் செய்வதாக உள்ளத்தால் எண்ணுவதாகும். பிறகு பிஸ்மில்லாஹ் கூறவேண்டும்.

**2.**இரு கைகளையும் மணிக்கட்டு வரை மூன்று முறை கழுவ வேண்டும்.

**3.**மூன்று முறை வாய்க் கொப்பளித்து நாசிக்கு தண்ணீர் செலுத்த வேண்டும்

**4.**முகத்தை- அகலவாக்கில் ஒரு காதிலிருந்து மறு காது வரை, நீளவாக்கில் தலை முடி முளைக்கும் இடத்திலிருந்து நாடிக்குழி வரை- மூன்று முறை கழுவ வேண்டும்.

**5.**இரு கைகளையும் விரல்களின் நுனியிலிருந்து முழங்கை வரை முதலில் வலது கை பிறகு இடது கை என மூன்று முறை கழுவ வேண்டும்.

**6.**ஒரு தடவை தலைக்கு மஸஹ் செய்ய வேண்டும். அதாவது இரு கைகளையும் தண்ணீரில் நனைத்து அவ்விரண்டையும் தலையின் முன்பாகத்தில் வைத்து பிடரி வரை தடவி ஆரம்பித்த இடத்திற்கு மீண்டும் கைகளைக் கொண்டு வர வேண்டும்.

**7.**பிறகு காதுகளில் ஒரு முறை தடவ வேண்டும். அதாவது இரு ஆட்காட்டி விரல்களை இரு காது களுக்குள் நுழைத்து கட்டை விரல்களால் காதுகளின் வெளிப்புறத்தைத் தடவ வேண்டும்.

**8.**இரண்டு கால்களையும் விரல்களின் நுனியி லிருந்து கரண்டை வரை முதலில் வலது கால் பிறகு இடது கால் என மூன்று முறை கழுவ வேண்டும்.

**9.**பிறகு அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹு வஅன்ன முஹம்மதன் அப்துல்லாஹி வரஸூலுஹு என ஹதீஸில் வந்துள்ள துஆவை ஓத வேண்டும்.

عن عمر بن الخطاب ﷺ عن النبي ﷺ قَالَ: مَا مِنْكُمْ مِنْ أَحَدٍ يَتَوَضَّأُ فَيُبْلِغُ أَوْ فَيُسْبِغُ الْوَضُوءَ ثُمَّ يَقُولُ أَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا الله وَأَنَّ مُحَمَّدًا عَبْدُ الله وَرَسُولُهُ إِلَّا فُتِحَتْ لَهُ أَبْوَابُ الْجَنَّةِ الثَّمَانِيَةُ يَدْخُلُ مِنْ أَيِّهَا شَاءَ (م/ ٢٣٤)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒருவர் உளுச் செய்து விட்டு அதையும் பூரணமாகச் செய்துவிட்டு பிறகு ஷஅஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹு வஅன்ன முஹம்மதன் அப்துல்லாஹி வரஸூலுஹு என்று கூறினால் அவருக்காக சொர்க்கத்தின் எட்டு வாசல்கள் திறக்கப்படுகின்றன. அவற்றில் அவர் விரும்பிய எந்த வாசல் வழியாகவும் அவர் அதில் நுழையலாம். அறிவிப்பவர்: உமர் (ரலி), நூல்: முஸ்லிம்-234

(பொருள்: வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்றும் முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஆவார்கள் என்றும் நான் சாட்சி கூறுகிறேன்.)